பக்கங்கள்: 08
காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 03 ஞாயிற்றுக்கிழமை 19.09.2021 கதிர் 182

## வவுனியாவில் மேலும் மூவர் தொற்றால் சாவு

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் மேலும் மூவர் கொரோனா வைரஸ் தொற்றால் மரணமடைந்துள்ளனர்.

பட்டக்காடு பகுதியில் பெண் ஒருவரும் (வயது 43), மன்னார் வீதியில் பெண் ☞2

# முரண்பட்ட கணவனைத் திருவலைக்கட்டையால் அடித்துக் கொடூரமாகக் கொலைசெய்த மனைவி!

## யாழ். அரியாலையில் நேற்றிரவு சம்பவம்





(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

குடும்பத்தில் ஏற்பட்ட முரண்பாடு முற்றியதால் கணவனைத் திருவலைக்கட்டையால் அடித்துப் படுகொலை செய்துள்ளார் மனைவி.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம், அரியாலை - பூம்புகார் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

துரைராசா செல்வக்குமார் (வயது-32) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இதன்போது உயிரிழந்துள்ளார். ☞2



# கோட்டாவின் ஆட்சி நீடித்தால் தமிழ் மக்களுக்குப் பேராபத்து

## சுமந்திரன் எம்.பி. பகிரங்க எச்சரிக்கை

சர்வதேச சமூகத்துக்கு இருமுகங்களைக் காண்பிக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ தலைமையிலான ஆட்சியை மாற்ற வேண்டும். ஜனநாயகத்துக்கு எதிரான நிலைப்பாடுகளைக் கொண்ட இந்த அரசு தொடர்ந்தும் ஆட்சியில் நீடித்தால் தமிழ் மக்களுக்குப் பேராபத்தாகும்.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் ☞2

## அநுராதபுரம் சிறை சம்பவத்துக்கு மன்னிப்புக் கோருகின்றது அரசு!

### லொஹான் ரத்வத்த பதவியிலிருந்து நீக்கப்பட்டார் என்கிறார் நீதி அமைச்சர்



அநுராதபுரம் மற்றும் வெலிக்கடை சிறைச்சாலைகளில் இடம்பெற்ற சம்பவங்களுக்காக, சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோருகின்றேன்.

-இவ்வாறு நீதி அமைச்சர் அலிசப்றி தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங் ☞2

## 2,100 கிலோ மஞ்சள் இறக்கப்பட்ட பின்பு திருப்பி அனுப்பப்பட்ட கடத்தல்காரர்கள்

(ந.லோகதயாளன்)

புத்தளம், கற்பிட்டி கடற்பரப்புக்குள் பெருமளவு மஞ்சளுடன் ஊடுருவிய இந்திய நாட்டுப் படகில் இருந்த மஞ்சள் இறக்கப்பட்ட பின்பு கடத்தல்காரர்கள் ஆறு பேரும் பத்திரமாகத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்திய மீனவர்களின் நாட்டுப் படகில் 60 மூடைகளில் 2 ஆயிரத்து 100 கிலோ மஞ்சளைக் கடத்தி வந்த படகை நேற்றிரவு கைப்பற்றிய கடற்படையினர், அதில் இருந்த ஆறு இந்தியர்களையும் கற்பிட்டி இறங்குதுறைக்குக் கொண்டு வந்து மஞ்சளை இறக்கினர்.

இவ்வாறு இந்தியப் ☞2

## கொரோனாத் தொற்றிலிருந்து மேலும் 1,002 பேர் குணமடைவு

*கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வந்த மேலும் 1,002 பேர் குணமடைந்து இன்று வீடு திரும்பியுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.*

*இதற்கமைவாக கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 4 லட்சத்து 32 ஆயிரத்து 38 ஆக உயர்வடைந்துள்ளது.*

## யாழ். மருத்துவபீட மாணவன் மரணம் குறித்து முன்கூட்டியே தகவல் வெளியாகியமை எப்படி?

### விசாரணை மேற்கொள்ளுமாறு பிரதமர் அலுவலகம் பணிப்புரை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் மரணம் தொடர்பில் முன்கூட்டியே தகவல் வெளியாகியமை தொடர்பில் விசாரணை மேற்கொள்ளுமாறு பிரதமர் அலுவலகம், பொலிஸ்மா அதிபருக்குப் பணிப்புரை விடுத்துள்ளது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் 3ஆம் வருட மாணவனான துன்னாலை வடக்கைச் சேர்ந்த சிதம்பரநாதன் இளங்குன்றன், தங்கியிருந்து கல்வி கற்று வந்த கோண்டாவில் ☞2



## கட்டுக்குள் வருகின்றது கொரோனா!

### சுகாதார விதிகளைத் தொடர்ந்து பின்பற்றுவோம்; விசேட வைத்திய நிபுணர் விஜேவிக்ரம அறிவுறுத்து

நாட்டில் பயணக்கட்டுப்பாடுகள் அமுலில் இருப்பதால் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து வருகின்றது என்று விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் கடந்த இரு ☞2

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 75 ஆயிரம் பேர் இதுவரை சிக்கினர்

தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 551 பேர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் 37 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 75 ஆயிரத்து 58 ஆக உயர்வடைந்துள்ளது ☞2

## கோட்டாவின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ.சுமந்திரன் எச்சரிக்கை விடுத்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு இணையவழியிலான நேர்காணல் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அவர், மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் வாய்மூலமான அறிக்கையை நிராகரிப்பதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது. அதேநேரம், உள்நாட்டில் இந்த அரசுக்கு எதிரான நிலைப்பாடுகளும் அதிகரித்து வருகின்றன. அவ்வாறான நிலையில் தற்போதைய ஆட்சியாளர்களுடன் பேச்சுகளை மேற்கொள்ளுதல், புதிய அரசமைப்பை உருவாக்குதல் உள்ளிட்ட விடயங்களில் எவ்வளவு தூரம்நம்பிக்கைகொண்டிருக்கின்றீர்கள் என்று எழுப்பப்பட்ட வினாவுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாங்கள் எந்தவொரு அரசின் மீதும் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. அவ்வாறு கொள்ளப்போவதும் இல்லை. கடந்த அரசின் மீதும் அவ்வாறான நிலைப்பாட்டிலேயே இருந்தோம். ஆனால், அவர்கள் புதிய அரசமைப்பை உருவாக்குவதாக சொன்னார்கள். அதற்காக அவர்களுடன் இணைந்து முயற்சிகளை எடுத்தோம். அது சாத்தியமாகவில்லை. அவ்வாறிருக்கையில், தற்போது ஆட்சியில் உள்ள அரசானது சர்வதேசத்துக்கு இரட்டை முகங்களைக் காண்பிக்கின்றது.

கடந்த மார்ச் மாதத்தில் நடைபெற்ற ஐ.நாவின் 46ஆவது கூட்டத்தொடரில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது அதனை முழுமையாக இலங்கை அரசு நிராகரித்தது. பின்னர் ஜூனில் 47ஆவது கூட்டத்தொடர் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது பொறுப்புக்கூறல் விடயத்தில் கூட ஐ.நா. மனித உரிமைகள் சபையுடன் இணைந்து பணியாற்றுவதற்குத் தயார் என்று டுவிட்டர் மூலம் ஜனாதிபதி அறிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாம் அதனை உடனடியாக வரவேற்றிருந்தோம். நடைமுறையில் அவரின் செயற்பாடுகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றோம் என்றும் குறிப்பிட்டிருந்தோம். ஜனாதிபதியின் இந்த விடயத்தைத் தானும் கவனித்துள்ளேன் என ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உயர்ஸ்தானிகர் மிச்செல் பச்லெட் அம்மையாரும் தற்போது நடைபெற்று வரும் 48ஆவது அமர்வின் வாய்மூல அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வாறிருக்கையில் தற்போது மீண்டும்ஐ.நா. மனிதஉரிமைகள்சபை உயர்ஸ்தானிகரின் அறிக்கையை நிராகரிப்பதாக அரசு அறிவிக்கின்றது. உண்மையிலேயே அரசு தனக்குள்ள இரண்டு முகங்களில் எதனைக் காண்பிப்பது என்பது தொடர்பில் தெரியாது நிற்கின்றது. ஆகவே, அரசு தனது போக்கை மாற்ற வேண்டும். அவ்வாறு இல்லாதுவிட்டால் நாட்டுக்கு மோசமான பின்விளைவு காத்திருக்கும்.

இதேவேளை, எதிரணிகளின் அரசுக்குஎதிரானஒன்றிணைவின்போதுஇனப் பிரச்சினை விடயத்தையும் உள்ளீர்க்க வேண்டும் என்பது எமது நிலைப்பாடாகும். கடந்ததடவையும்அந்த விடயம் உள்ளீர்க்கப்பட்டது. அந்தவகையில் இம்முறையும் அவ்விதமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்போதுநாம்எமது விடயங்களையும்முன்னிலைப்படுத்துவோம்.

எவ்வாறாயினும் தற்போது காணப்படுகின்ற கொடூரமான ஆட்சியைத் தொடர இடமளிக்க முடியாது. அவ்வாறு இடமளிக்க விடுவதானது சிறுபான்மை தேசிய இனங்களுக்குக் குறிப்பாக தமிழர்களுக்குப் பேராபத்தானது.

விசேடமாக இந்த ஆட்சிக்காலத்தில் நில அபகரிப்புக்கள் அதிகமாகியுள்ளன. இந்நிலைமை தொடர்ந்தால் தீர்வு பற்றி பேசுகின்ற போது நாம் நிலமற்றவர்களாகிவிடுவோம். அதற்குப் பின்னர் தீர்வைப் பெற்றுக்கொள்வதில் பயனில்லை. ஆகவே, அவ்விதமான ஆக்கிரமிப்பு, அடக்குமுறை ஆட்சியை உடனடியாக மாற்ற வேண்டும் - என்றார்.

## வவுனியாவில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவரும் (வயது 83), பாண்டியன் வீதி கூமாங்குளத்தில் ஆண் ஒருவரும் (வயது 93) மரணமடைந்துள்ளனர்.

மரணமடைந்தவர்களின் சடலங்களை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்வதற்குரிய நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் மேலும் 83 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளின் முடிவுகள் சில வெளியாகியுள்ளன.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் மேலும் 83 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களைக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைத்தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## தனிமைப்படுத்தல்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மேல் மாகாணத்துக்கு உட்பிரவேசிக்கும் - வெளியேறும் 13 பிரதேசங்களில் 117 பொலிஸார், 92 இராணுவத்தினர் இணைந்து சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன்போது தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறி 164 வாகனங்களில் நேற்று வந்த 292 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மேல் மாகாணத்தில் நேற்றுக் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை 295 பொலிஸார் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது அனுமதிப்பத்திரமின்றி 895 வாகனங்களில் பயணித்த 1,388 பேர்திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் - என்றார்.

## அநுராதபுரம்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இவ்விரு சிறைச்சாலைகளில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவங்களையடுத்து ஜனாதிபதியைத் தொடர்புகொண்டு, லொஹான் ரத்வத்தவைப் பதவி விலகுமாறு நாமே கோரினோம். இதற்கமையவே அமைச்சு பதவியில் இருந்து அவரை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இப்படியானசம்பவங்கள்இடம்பெற்றிருக்கக் கூடாது. அவற்றை அனுமதிக்கவும் முடியாது. எனது அமைச்சின் கீழ் வருகின்ற இராஜாங்க அமைச்சர் ஒருவர் இவ்வாறு செயற்பட்டுள்ளமை என்னையும் அசௌகரியத்துக்கு உட்படுத்தியுள்ளது - என்றார்.

## கட்டுக்குள்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதங்களில் தொற்றாளர்களின் எண்ணிக்கை உச்சம் தொட்டிருந்தது. வைத்தியசாலைகளில் இடமிருக்கவில்லை. ஒட்சிசன் வழங்குவதிலும் நெருக்கடி நிலைமை ஏற்பட்டது. தற்போது இந்நிலைமை மாறியுள்ளது. வைத்தியசாலைகளில் இடம் உள்ளன.

இந்நிலைமையை நாம் தக்கவைத்துக்கொள்ள வேண்டும். அதற்காக முழுமையாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். தடுப்பூசி ஏற்றிக் கொள்ள வேண்டும். குறிப்பாக இரண்டு தடுப்பூசிகள் பெற்ற பின்னர்கூட சுகாதார நடைமுறைகளைப்பின்பற்ற வேண்டும் - என்றார்.

## 2,100 கிலோ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படகில் இருந்த மஞ்சள் இறக்கப்பட்டு கைப்பற்றப்பட்ட நிலையில் படகில் இருந்த ஆறு இந்தியர்களும் இன்று மாலை மஞ்சள் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட நாட்டுப் படகிலேயே பத்திரமாக இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்படனர்.

1055ஆம் இலக்கப் படகில் கடத்தல்காரர்கள் ஆறு பேரும் புத்தளத்தில் இருந்து தமிழகம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றனர்.

## யாழ். மருத்துவ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு, வன்னியசிங்கம் வீதியிலுள்ள வீட்டில், உயிரிழந்த நிலையில் கடந்த 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17ஆம் திகதி சடலமாகக் கண்டெடுக்கப்பட்டார்.

ஆனால், மரணம் தொடர்பில் பொலிஸார், தற்கொலை எனும் ரீதியில் விசாரணைகளை கிடப்பில் போட்டு இருந்தனர்.

குறித்த சம்பவத்தில் மரணமடைந்தமை தெரிய வருவதற்கு முன்பாக, அதாவது இரண்டரை மணித்தியாலங்களுக்கு முன்னரே அவர் மரணமடைந்தமை தொடர்பில் தகவல் வெளியிடப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனாலும், அவர்கள் எந்ததொரு நடவடிக்கையும் எடுக்காதமையால் பிரதமர் மஹிந்தராஜபக்ஷவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இந்நிலையிலேயே, இறந்த விடயம் தெரியவருவதற்கு முன்பாக இறந்தமை தொடர்பில் தகவல் வெளியானமை தொடர்பில் உரிய விசாரணையை மேற்கொள்ளுமாறு பிரதமர் அலுவலகம், பொலிஸ்மா அதிபருக்குப் பணிப்புரை விடுத்துள்ளது.

## முரண்பட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த அவர், ஏழாலை மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த பெண்ணைத் திருமணம் முடித்து பூம்புகாரில் வசித்து வருகின்றார்.

மேசன் தொழிலில் ஈடுபடும் குடும்பத்தலைவருக்கு மனைவியுடன் சில நாள்கள் நீடித்த குடும்ப முரண்பாடு முற்றிய நிலையில் நேற்றிரவு கொலை செய்யப்பட்டுள்ளார் என்று ஆரம்ப விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இன்று அதிகாலை யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகள் முன்னெடுத்தனர். உடனடியாகக் குடும்பப்பெண் கைது செய்யப்பட்டார்.

திருவலைக் கட்டையால் கடுமையாகத் தாக்கப்பட்ட குடும்பத்தலைவரின் உடலில் 5 இற்கு மேற்பட்ட காயங்கள் காணப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் தடயவியல் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

வீட்டிலிருந்த சடலத்தை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர்போல் இன்று பகல் பார்வையிட்டார். அதையடுத்து சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## ‘எப்பவோ முடிந்த காரியம்’

**ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அமர்வு தொடர்பாக இலங்கை அரசு முன்னெடுக்கும் நடைமுறைத் திட்டம் பயனற்றது, இலங்கைக்கு அது விபரீதமாக அமையக்கூடும் என்ற சாரப்பட ஆங்கில வார இதழ் ஒன்று தனது வாராந்த அரசியல் பத்தியில் எச்சரிக்கை முன் வைத்திருக்கின்றது.**

**கடந்த மார்ச் மாதம் மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், இலங்கையின் யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்றவை தொடர்பில் ஒரு லட்சத்து இருபதாயிரம் தனித்தனி சாட்சிய அறிக்கைகளின் பதிவேடுகளுடன் அந்த யுத்த நடவடிக்கைகள் தொடர்பான ஆவணப் பதிவுகள், சான்றாதாரங்கள், சாட்சியங்களை அழிந்து விடாமல் சேகரித்துப் பாதுகாப்பதற்கான ஆவணக் காப்பகப் பணி ஆரம்பமாவதாக மனித உரிமைகள் ஆணையாளர் அறிவித்திருக்கின்றமையை அந்த வார இதழ் சுட்டிக்காட்டியுள்ளது.**

**இது சிறிய விடயமாகப் புறமொதுக்கத்தக்கதல்ல என்ற சாரப்பட அது குறிப்பிட்டுள்ளது.**

**‘ஒரு நாட்டின் அனுமதியின்றி, அந்த உள்நாட்டு விவகாரம் தொடர்பாக அந்த நாட்டின் சட்ட ரீதியான அரசை புறந்தள்ளி, இத்தகைய முயற்சி எடுப்பது பயனற்றது’ என்ற கருத்தில் இவ்விடயத்தை ஒட்டி மனித உரிமைகள் ஆணையாளருக்கு அளித்த பதிலில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டிருக்கின்றார். இப்படிப் பயனற்றது, பலன் தராதது, முறையற்றது என்று ஒருதலைப்பட்சமாக வெளியிலிருந்து அறிவிப்பது மட்டும் இத்தகைய வழிமுறையில் முன்னெடுக்கப்படப் போகின்ற பேராபத்தான விடயங்களைத் தடுத்து நிறுத்தி விட மாட்டா என்று அந்தப் பத்திரிகை சுட்டிக்காட்டி இருக்கின்றது.**

**அது உண்மைதான். சர்வதேச நியாயாதிக்கத்தின் அடிப்படையில், ஒரு நீதி முறைமைப் படுகுழிக்குள் இலங்கையைத் தள்ளுவதற்கான இணை அனுசரணை நாடுகளின் தந்திரோபாயத் திட்டமே இப்போது இப்படிக் கட்டவிழ்கின்றது. அடுத்த வருடத்தில் இந்தத் திட்டத்தை கனகச்சிதமாக முன் நகர்த்துவதற்கான மேடையே இப்போது அமைக்கப்படுகின்றது. இலங்கையில் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை முன்னெடுத்த அரச படையினர் இந்த சர்வதேச நியாயாதிக்க வலைப்பின்னல் என்ற சட்ட முறைமைகள் சிக்குவதில் முன்னணியில் இருக்க போகிறார்கள். ஆகையினால் இந்த சாட்சியப் பதிவுகள் மற்றும் அதைத் தொடர்ந்த நீதி முறைமைகள் ஒழுங்கு முறையில் கட்ட விழ்ந்து மேடையேறுவதைத் தவிர்ப்பதற்கு காத்திரமான நடவடிக்கைகளை இலங்கை அரசு எடுக்க வேண்டும் என்று அந்தப் பத்திரிகை எச்சரித்திருக்கிறது.**

**ஆனால் இது விடயத்தில் பந்து இப்போது இலங்கை அரசின் களத்தில் இல்லை. அது இலங்கையின் களத்தை விட்டு நீங்கி போய் நீண்ட காலம் ஆகிவிட்டது.**

**ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக, இலங்கையும் சேர்ந்து வாக்குறுதி அளித்து, அனுசரணை வழங்கி, நிறைவேற்றிய தீர்மானங்களிலிருந்து இலங்கை விலகுகிறது என கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு பதவியேற்ற கையோடு ஒருதலைப் பட்சமாக அறிவித்ததை அடுத்து, இலங்கையைப் பொறுப்புக் கூறலுக்கான சரியான பொறிமுறைக்குள் சிக்க வைப்பதற்கான தந்திரோபாய திட்டத்தை இணை அனுசரணை நாடுகள் உடனடியாகவே தொடங்கிவிட்டன. அதில் கட்டவிழும் ஒரு நடவடிக்கைதான் யுத்தகால சாட்சியங்கள், சான்றாதாரங்கள், ஆவணங்களைப் பாதுகாப்பாகச் சேமித்து, ஒழுங்குபடுத்தி, சர்வதேச நியாயாதிக்கத்தின் கீழ் சட்ட நடவடிக்கைகளை எடுக்கும் தரப்புகளுக்கு வழங்கும் இந்த நடைமுறை ஏற்பாடாகும்.**

**யோகர் சுவாமியின் மகாவாக்கியம் போன்று இது எப்பவோ முடிந்த காரியம். இனி, இலங்கை எந்த முயற்சி எடுத்தும் இந்த விடயத்தின் முன்னகர்வைத் தடுத்து நிறுத்த முடியாது என்பதுதான் களயதார்த்தமாகும்.**

# மதுபானசாலைகளைத் திறப்பதற்கு சுகாதார அமைச்சு அறிவிக்கவில்லை!

### வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவிப்பு



கொவிட் நிலைமையின் காரணமாக நாடளாவிய ரீதியில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறையிலுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் மதுபானசாலைகள் திறக்கப்படுகின்றமை பொருத்தமான விடயமல்ல என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியநிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மதுபானசாலைகளைத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வெளியான செய்தியை அடுத்து ஏற்பட்டுள்ள சர்ச்சை தொடர்பாகக் கேட்கப்பட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

கொவிட் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக நாடளாவிய ரீதியில் தனிமைப்படுத்தல் ஊரடங்குசட்டம்நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் மதுபானசாலைகளை மாத்திரம் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்குமாயின் அது தற்போது முன்னெடுக்கப்பட வேண்டிய பொருத்தமானசெயற்பாடல்ல. சுகாதார அமைச்சால் இது தொடர்பாக எந்த அறிவித்தலும் விடுக்கப்படவில்லை.

சுகாதார அமைச்சு மாத்திரமல்ல. வேறு யார் இதற்கு அனுமதி வழங்கினாலும் மக்கள் ஒன்று கூடும் சந்தர்ப்பங்கள் ஏற்படுவதன் மூலம் கொவிட் பரவலுக்கான வாய்ப்புக்களும் அதிகமுள்ளன.

எனவே உரிய அதிகாரிகள் இது தொடர்பாக அவதானம் செலுத்த வேண்டும். இது போன்றதொரு நிலைமை மீண்டுமொரு முறை ஏற்பட வாய்ப்பளிக்கப்படக் கூடாது என்று தெரிவித்தார்.

# அதிவேக நெடுஞ்சாலையின் காசாளர் 14 லட்சம் ரூபாவுடன் மாயமாகி கைது

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான, அதிவேக பாதையின் களனிகம இடைமாறல் அலுவலகத்தின் பொறுப்பிலுள்ள இரு பெட்டகங்களில் இருந்த 14 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணத்துடன் மாயமான காசாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பண்டாரவளை பகுதியில் வைத்து, பாணந்துறை குற்றத் தடுப்புப் பிரிவின் பொலிஸ் குழுவினர் அவரைக் கைது செய்தனர் எனப் பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ கூறினார்.

கடந்த செப்டெம்பர் 11 ஆம் திகதி, களனிகம இடைமாறல் அலுவலகத்தின் 14 லட்சத்து 18 ஆயிரத்து 500 ரூபாவுடன் பணத்துக்கு பொறுப்பாக செயற்பட்ட பிரதான காசாளர் மாயமாகியுள்ளார் எனக் கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் எனவும், திருடப்பட்ட பணத்தில் 3 லட்சத்து 84 ஆயிரம்ரூபாஇதுவரை மீட்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளில், மேற்படி காசாளர் கடந்த ஓகஸ்ட் 31ஆம் திகதி முதல் சிறிது சிறிதாக பெட்டகத்திலிருந்த பணத்தை எடுத்துச் சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

விசாரணைகளுக்குப் பொறுப்பாக செயற்பட்ட பொலிஸ் அதிகாரி ஒருவரின் தகவல்கள் பிரகாரம், கைது செய்யும் போது சந்தேக நபரிடம் 5 ஆயிரம் ரூபா மட்டுமே இருந்ததாகக் கூறினார்.

திருடிய பணத்தில் 5 லட்சத்து 10 ஆயிரம் ரூபாவை சந்தேக நபர் தனது தனிப்பட்ட கடன்களை மீள செலுத்தப் பயன்படுத்தியுள்ளார் எனவும், அவ்வாறு கடன் மீள செலுத்தப்பட்டவர்கள் பட்டியலில் இரு வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊழியர்களும் அடங்குகின்றனர் எனவும் அந்த அதிகாரி சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில், உள்ளக ஆய்வின் போது, காசாளர்களின் பெட்டகத்திலிருந்தும், அன்றாட வருமானத்தை வைக்கும் பெட்டகத்திலிருந்தும் பணம் திருடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்தே பண்டாரகம பொலிஸாரும் பாணந்துறை குற்றத் தடுப்புப் பிரிவினரும் சந்தேக நபரைக் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீளாய்வுக்குட்படுத்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்

### எரான் விக்ரமரத்ன வலியுறுத்தல்



பயங்கரவாதத்தடைச்சட்டத்தின்கீழ் ஒருவர் கைதுசெய்யப்பட்டதன் பின்னர் அவரைத் தடுத்துவைப்பதற்கான உத்தரவை வழங்குவதற்கான அதிகாரத்தை பாதுகாப்பு அமைச்சர் கொண்டிருப்பதும் அவ்வாறு தடுத்துவைப்பதற்கான உத்தரவை சுமார் ஒன்றரை வருடம் வரையில் காலத்துக்குக்காலம் நீடிக்கக் கூடிய வாய்ப்பு காணப்படுகின்றமையும் மிகவும் பாரதூரமான விடயமாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமாத்திரமன்றி பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீளாய்விற்கு உட்படுத்துவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கும் அதேவேளை, அதனூடாக நீதியை நிலைநாட்டவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மீளாய்விற்கு உட்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வெளியிட்டிருக்கும் காணொலியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

# 60 வயதுக்கு மேற்பட்ட ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் இதுவரை தடுப்பூசி பெறவில்லை

நாட்டில் 60 வயதுக்கு மேற்பட்ட ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர், இதுவரை கொரோனாத் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கள உத்தியோகத்தர்களால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையில் இந்த விடயம் தெரியவந்துள்ளதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

தடுப்பூசியேற்றும் நடவடிக்கை தொடர்பாக பரவும் பொய்யான விடயங்கள் காரணமாக தடுப்பூசியை நிராகரிப்பதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதுவரை தடுப்பூசி பெறாத 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் அதிகளவானோர் யாழ். மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஆப்கானிஸ்தான் காபூல் விமான தாக்குதல் எம்முடைய தவறே; அமெரிக்கா ஒப்புதல்!

காபூலில் நடந்த ஆளில்லா விமானத் தாக்குதலில் குழந்தைகள் உட்பட 10 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்ட சம்பவம் தமது தரப்பில் இடம்பெற்ற தவறால் நேர்ந்தது என்பதை அமெரிக்கா ஒப்புக்கொண்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் தலிபான்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர் காபூல் விமான நிலையத்தில் இருந்து அமெரிக்கா முழுமையாக வெளியேறுவதற்கு இரண்டு நாள்களுக்கு முன்னர் ஒகஸ்ட் 29 ஆம் திகதி ஆளில்லா விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது.

அமெரிக்காவின் இந்தத் தாக்குதலில் ஏழு சிறுவர்கள் உட்பட ஒரே குடும்பத்தைச் சோந்த 10 பேர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட சுமையா என்ற குழந்தைக்கு இரண்டு வயது என்பதும் குறிப்பிடத்தக்கது.

தலிபான்கள்ஆட்சிக்குவந்ததைத் தொடர்ந்து, காபூல் விமான நிலையத்தில் பயங்கரவாதத் தாக்குதல் நடந்த சில நாள்களுக்குப் பின்னர் இந்தக் கொடூர தாக்குதல் நடந்தது.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க இராணுவம் மேற்கொண்ட 20 வருட இராணுவ நடவடிக்கையின் இறுதிக் தாக்குதல்களில் ஒன்றாகவும் இது அமைந்தது.

ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் உள்நாட்டுக்கிளைக்குழுவான ஐ.எஸ்.-கே தீவிரவாதிகளை குறிவைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அமெரிக்கா முன்னர் தெரிவித்தது. ஐ.எஸ்.-கே தீவிரவாதிகளின் நடமாட்டத்தை அமெரிக்க உளவுத்துறை எட்டு மணி நேரம் கண்காணித்தது என்று அமெரிக்க இராணுவத்தின் கட்டளை அதிகாரி ஜெனரல் கென்னத் மெக்கென்சி கூறினார்.

தாக்குதல் இடம்பெற்ற வளாகத்தில் ஐஎஸ்-கே உடன் தொடர்புடைய நபரின் கார் ஒன்று காணப்பட்டது. காபூல் விமான நிலையத்தில் தாக்குதல் நடத்திய பயங்கரவாத குழுவின் திட்டங்கள் குறித்த உளவுத்துறை தகவல்களின் அடிப்படையிலேயே அந்தக் கார் இலக்கு வைக்கப்பட்டது.

ஒரு கட்டத்தில் அந்தக் காரில் வெடி பொருள்கள் இருந்ததும் அதில் சிலர் ஏறுவதும் கண்காணிப்பில் ஈடுபட்ட ட்ரோன் மூலம் உறுதி செய்யப்பட்டது. அதன் பின்னரே தாக்குதல் நடத்தப்பட்டது எனவும் இராணுவத்தின் கட்டளை அதிகாரி ஜெனரல் கென்னத் மெக்கென்சி கூறினார்.

எனினும் 10பொதுமக்கள் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டமை சோகமான தவறு என்று அவர் விவரித்தார்.

இதேவேளை, தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் அமெரிக்காவிற்கு செல்ல விண்ணப்பித்து, விமான நிலையம் செல்வதற்காகதொலைபேசி அழைப்புக்காக காத்திருந்தவர்கள் என அவர்களது உறவினர்கள் சர்வதேச ஊடகங்களிடம் தெரிவித்தனர்.

கொல்லப்பட்டவர்களில் ஒருவரான அகமது நாசர் அமெரிக்கப் படைகளுக்கு மொழிபெயர்ப்பாளராக இருந்தவர். பாதிக்கப்பட்ட மற்றவர்கள் முன்பு சர்வதேச நிறுவனங்களில் பணிபுரிந்தவர்கள் அவர்களிடம் அமெரிக்கா செல்வதற்கான விசா இருந்தது.

இந்நிலையில் இந்தத் தாக்குதல் தமது தவறு எனக் கூறி அமெரிக்கா தப்பிவிட முடியாது என விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன. இது ஒரு போர்க்குற்றம் என கண்டனங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

அமெரிக்கர்கள் தங்கள் 20 வருட ஆக்கிரமிப்பை முடித்து வெளியேறிய இறுதி நாள்களில் பதிவான கறைபடிந்த வரலாறாக இது அமைந்துள்ளது. ஆளில்லா விமானங்களின் மூலமான தாக்குதல்களின் ஆபத்தான விளைவுகளுக்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு எனவும் பல்வேறு தரப்புக்கள் கண்டித்துள்ளன.




# அமெரிக்கா, பிரித்தானியாவில் இருந்து தூதர்களை திரும்பப்பெற்றது பிரான்ஸ்!

அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகளிலுள்ள தங்களது தூதர்களை பிரான்ஸ் மீள அழைத்துள்ளது.

முக்கியத்தும் வாய்ந்த ஆக்கஸ் என்று அழைக்கப்படும் கூட்டுத் திட்டத்தில், அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் அவுஸ்ரேலியா ஆகிய நாடுகள் இணைந்துள்ளதன் பின்னணியில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவுக்கான அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களை உள்ளடக்கிய முத்தரப்பு பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக, அந்த நாடு உடனடியாக தூதர்களை திரும்பப் பெற்றதாக பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

'குடியரசுத் தலைவரின் வேண்டுகோளின் பேரில், அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவுக்கான எங்கள் இரண்டு தூதர்களை உடனடியாகப் பாரிஸுக்கு அழைத்து ஆலோசனை நடத்த முடிவு செய்துள்ளேன்' என பிரான்ஸ் வெளியுறவுஅமைச்சர் ஜீன்-யவ்ஸ் லெ ட்ரியன் தெரிவித்தார்.

பிரான்ஸ் நாட்டின் நேவல் குழுமத்திடமிருந்து அணு ஆற்றலால் இயங்கும் மற்றும் அணு ஆயுதத்தை ஏவும் திறன் கொண்ட நீர்மூழ்கிக் கப்பல்களை வாங்க ஆஸ்திரேலியா ஒப்பந்தம் செய்திருந்தது. இந்த ஒப்பந்தம் நிமித்தமாகக் கடந்த 2016ஆம் ஆண்டிலிருந்தே பிரான்ஸ், ஆஸ்திரேலியா நாடுகள் தரப்பில் பேச்சு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ஆனால், முக்கியத்தும் வாய்ந்த ஆக்கஸ் என்று அழைக்கப்படும் கூட்டுத் திட்டத்தில், அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் இணைந்ததன் மூலம் திடீரென பிரித்தானியாவுடன் கைகோர்த்த ஆஸ்திரேலியா தனக்குத் தேவையான நீர்மூழ்கிக் கப்பல்களை அமெரிக்காவிடமிருந்து வாங்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

இதனால், பிரான்ஸ் நாட்டால் வடிவமைக்கப்படும் நீர்மூழ்கியை உருவாக்கும் ஒப்பந்தத்தை ஆஸ்திரேலியா ரத்து செய்துள்ளது. இந்த விவகாரம் இரு நாடுகளுக்கிடையிலான உறவில் விரிசலை ஏற்படுத்தி யுள்ளது. பிரான்ஸுடன் ஆஸ்திரேலியா மேற்கொண்டிருந்த ஒப்பந்தம் 5 ஆயிரம் கோடி ஆஸ்திரேலியா டொலர்கள் மதிப்பிலானது.

## 440,000 பவுண்டுகள் பெறுமதியான போதைப்பொருள்களுடன் மூவர் கைது

ஆன்ட்ரிம் மற்றும் டைரோன் பகுதிகளில் நடத்தப்பட்ட சோதனைகளின் போது, 440,000 பவுண்டுகள் பெறுமதியான போதைப்பொருள்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

வடக்கு அயர்லாந்தின் பொலிஸ் சேவையின் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப்பிரிவு, பெல்ஃபாஸ்ட், காஸ்ட்கால்ஃபீல்ட் மற்றும் ஆக்னாக்லோய் ஆகிய இடங்களில் கடந்த வெள்ளிக்கிழமை சோதனை நடத்தியது.

இதன்போது 'பி' தர போதைப்பொருள்களை பொலிஸார் கைப்பற்றினர். மேலும், சோதனையின் போது பணம் மற்றும் கைத்தொலைப்பேசிகள் கைப்பற்றப்பட்டன என பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப்பொருள் குற்றத்தில் சந்தேகத்தின் பேரில் 33 மற்றும் 44 வயதுடைய இரண்டு ஆண்கள் மற்றும் 40 வயதுடைய ஒரு பெண் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# உண்மைக்கு புறம்பான விடயங்களை ஆஸ்திரேலியா, அமெரிக்கா தெரிவிப்பு



ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் புதிய பாதுகாப்பு ஒப்பந்தத்தில் உண்மைக்கு புறம்பான விடயங்களை கூறுவதாக பிரான்ஸ் குற்றம் சாட்டியுள்ளது.

குறித்த ஒப்பந்த விடயத்தில் இரட்டை தன்மை, அவமதிப்பு மற்றும் விடயத்தினை மீறி செயற்படுதல் என்பன இடம் பெற்றுள்ளன என பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஆக்கஸ் என அழைக்கப்படும் இந்த ஒப்பந்தத்தின் ஊடாக அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்களை உருவாக்கும் தொழில்நுட்பம் ஆஸ்திரேலியாவுக்கு வழங்கப்படும்.

இந்த நடவடிக்கையானது ஆஸ்திரேலியாவுடன் பிரான்ஸ் கைச்சாத்திட்டுள்ள பல பில்லியன் டொலர் பெறுமதியான ஒப்பந்தத்தை ரத்தாக்கியுள்ளது.

பிரித்தானியாவை உள்ளடக்கிய குறித்த ஆக்கஸ் ஒப்பந்தமானது சர்ச்சைக்குரிய தென்சீனக் கடலில் சீனாவின் ஆதிக்கத்தை எதிர்கொள்ளும் முயற்சியாக கருதப்படுகின்றது. இந்நிலையில் அமெரிக்காவிலுள்ள தூதுவரை மீள அழைப்பது குறித்து ஆலோசிக்கப்படுவதாக பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# கேனரி தீவில் நில நடுக்கங்கள்; எரிமலை வெடிக்கும் அபாயம்!

சமீபத்திய நாள்களில் கேனரி தீவான லா பால்மாவில் ஆயிரக்கணக்கான சிறிய நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளதால், அங்குள்ள எரிமலை வெடிக்கும் அபாயம் இருப்பதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

ஸ்பானிஷ் தீவு கும்ப்ரே வீஜா தேசிய பூங்காவில் உள்ள டெனிகுவியா எரிமலையின் தாயகமாகும். இந்த பகுதியை சுற்றி 4,222 நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளன என அந்நாட்டின் தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் மாக்மா எரிமலைச் சங்கிலியில் புகுந்து, அதன் உச்சத்தை 6 சென்டிமீற்றர் (2.4 அங்குலம்) உயர்த்தியதாக தேசிய நில அதிர்வு மையம் குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையில், அடுத்த சில நாள்களில் நிலநடுக்கங்களின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளதாகத் தெரிவித்துள்ள அதிகாரிகள் இது எரிமலை வெடிப்பிற்கு வழிவகுக்கலாம் என எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஏற்கெனவே ஏற்பட்ட நிலநடுக்கங்களால் கும்ப்ரே விஜா எரிமலையில் தீப்பிழப்புகள் ஏற்பட்டுள்ள நிலையில் தற்போது எரிமலையிலிருந்து லார்வா குழம்புகள் கசியத் தொடங்கியுள்ளன என அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும், எரிமலை வல்லுநர்கள் உடனடியாக வெடிப்பதற்கான தெளிவான அறிகுறிகள் இல்லை என்று கூறினர்.

அரசாங்கம் ஏற்கனவே வெடிப்பு எச்சரிக்கை அளவை உயர்த்தியுள்ளது மற்றும் அந்த பகுதியில் உள்ள மக்கள் தங்கள் கைத்தொலைபேசிகள், முக்கிய ஆவணங்கள் மற்றும் வெளியேறும் போது தேவையான மருந்துகளுடன் தயார் நிலையில் இருக்க அறிவுறுத்தியுள்ளது.

லா பால்மா தீவில் சுமார் 83,000 குடியிருப்பாளர்கள் உள்ளனர். டெனிகுவியா எரிமலை கடைசியாக 1971இல் வெடித்தது, ஸ்பானிஷ் மண்ணில் நடந்த கடைசி மேற்பரப்பு வெடிப்பு இதுவாகும்.

பத்து ஆண்டுகளுக்கு முன்பு, இதேபோன்ற ஆனால் குறைவான சக்தி வாய்ந்த நடுக்கம் அருகிலுள்ள தீவான எல் ஹியரோவைத் தாக்கியது, இது நீருக்கடியில் எரிமலை வெடிப்புடன் முடிவடைந்தது.



# நடுக்கடலில் நாகை மீனவர்களை மிரட்டி பொருள்களைப் பறித்த இலங்கை மீனவர்கள்



தமிழகத்தின் நாகை மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, இலங்கையைச் சேர்ந்த மீனவர்கள் கத்தியைக் காட்டி மிரட்டி வலைகள் உள்ளிட்டவற்றை பறித்துச் சென்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வேதாரண்யம் அருகே உள்ள ஆறுகாட்டுத்துறையைச் சேர்ந்த மீனவர்கள் 4 பேர், அருள்செல்வன் என்பவரது பைபர் படகில் நேற்று முன்தினம் மதியம் மீன்பிடிப்பதற்காக கடலுக்குச் சென்று, 15 கடல் மைல் தொலையில் இரவு நேரத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கையைச் சேர்ந்த மீனவர்கள்25பேர்ஐந்துபடகுகளில்வந்துஅவர்களைச்சுற்றிவளைத்துள்ளனர். அவர்கள், கத்தியைக் காட்டி மிரட்டி, மூன்று லட்சம் ரூபா மதிப்புள்ள வலைகள், ஜிபிஎஸ் கருவிகள், வோக்கிடோக்கிகள், டோர்ச் லைட் உள்ளிட்ட பொருள்களைப் பறித்துக் கொண்டு விரட்டியடித்துள்ளனர்.

மீன்பிடி சாதனங்கள் பறிக்கப்பட்ட நிலையில், வெறுங்கையுடன் கரை திரும்பிய ஆறுகாட்டுத்துறை மீனவர்கள் இதுபற்றி கடலோர குழும காவல் துறை மற்றும் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் முறையிட்டுள்ளனர்.

## பஞ்சாப் மாநில முதல்வர் பதவி விலகினார் காங்கிரஸ் கட்சியின் உட்பூசலால் தீர்மானம்

பஞ்சாப் மாநிலத்தில் அடுத்தஆண்டுசட்டசபைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், ஆளும் காங்கிரஸ் கட்சியில் உட்கட்சிப் பூசல் பெரிய அளவில்



வெடித்துள்ளது. முதல்வர் அமரீந்தர் சிங்கிற்கும் கட்சியின் மூத்த தலைவர் சித்துவுக்கும் இடையே நீண்ட காலமாக இருந்த கருத்து வேறுபாடு உச்சக் கட்டத்தை எட்டியது.

அமரீந்தர் சிங்கிற்கு எதிராக காங்கிரஸ் எம்.எல்.ஏக்களும் போர்க் கொடி தூக்கிய நிலையில், முதல்வர் அமரீந்தர் சிங் நேற்று பதவியை ராஜினாமா செய்தார். ஆளுநர் பன்வாரிலால் புரோகித்திடம் தனது ராஜினாமா கடிதத்தை அவர் வழங்கினார். அதன் பின்னர் ஊடகவியலாளர்களைச் சந்தித்த அமரீந்தர் சிங், தன்னைக் கட்சி அவமானப்படுத்திவிட்டதாகத் தெரிவித்துள்ளார்.

'பேச்சு நடந்த விதம் என்னை அவமானப்படுத்துவது போல் இருந்தது. காலையில் காங்கிரஸ் தலைவரிடம் பேசினேன். அப்போது, ராஜினாமா செய்கிறேன் என அவரிடம் தெரிவித்தேன். சமீபத்திய மாதங்களில் எம்.எல்.ஏக்கள் கூட்டத்தைக் கூட்டுவது இது மூன்றாவது முறையாகும். அதனால் தான் நான் விலக முடிவு செய்தேன். கட்சித் தலைமை யாரை நம்புகிறதோ, அவரை முதல்வர் ஆக்கட்டும். இப்போதும் நான் காங்கிரஸ் கட்சியில்தான் இருக்கிறேன். எனது ஆதரவாளர்களுடன் கலந்தாலோசித்து எதிர்காலத்திட்டம் குறித்து முடிவு செய்வேன்' என்று அமரீந்தர் சிங் கூறியிருக்கிறார்.

அமரீந்தர் சிங் பதவி விலகியதன் பின்னர் காங்கிரஸ் சட்டப்பேரவை உறுப்பினர்களின் கூட்டம் சண்டிகரில்நடைபெற்றது. 80 எம்.எல்.ஏக்கள் வரை பங்கேற்ற அந்தக் கூட்டத்தில் இரண்டு தீர்மானங்கள் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டன. அதில் ஒன்றில், சட்டப்பேரவை காங்கிரஸ் குழுத் தலைவரைத் தேர்வு செய்யும் அதிகாரத்தை கட்சியின் இடைக்காலத் தலைவர் சோனியா காந்திக்கு வழங்குவது என முடிவு செய்யப்பட்டது. மற்றொரு தீர்மானத்தில், பஞ்சாப் மற்றும் காங்கிரஸின் வளர்ச்சிக்கு சிறப்பான பங்களிப்பை செலுத்திய அமரிந்தர் சிங்கிற்கு பாராட்டும் மற்றும் நன்றியும் தெரிவிக்கப்பட்டதாக காங்கிரஸ் மூத்த தலைவர் அஜய் மக்கேன் தெரிவித்தார்.

அமரீந்தர் சிங் ராஜினாமா செய்ததையடுத்து, பஞ்சாப் காங்கிரஸின் முன்னாள் தலைவர் சுனில் ஜாக்கர் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மும்பைக்கு வரும் பொதுமக்களுக்கு கொரோனாப் பரிசோதனை மையங்கள்

மகாராஷ்டிராவில் 10 நாள்கள் கொண்டாடப்படும் விநாயகர் சதுர்த்தி விழா முடிவுக்கு வந்ததையடுத்து, திருவிழாக் கொண்டாட்டங்களுக்காக மும்பையில் இருந்து சொந்த ஊருக்குப் பயணம் செய்தவர்கள் அடுத்த சில நாள்களில் மும்பைக்குத் திரும்புவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.



பெருமளவு மக்கள் இவ்வாறு பயணங்களை மேற்கொள்ளும்போது மும்பையில் மீண்டும் அதிகளவில் கொரோனா பரவிவிடக் கூடாது என்பதால், விநாயகர் சதுர்த்தி விழாவைக் கொண்டாட சொந்த ஊர் சென்றவர்கள் மும்பை திரும்பும்போது கட்டாயம் கொரோனாப் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும் என மும்பை மாநகராட்சி பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. இதுகுறித்து மாநகராட்சியின் கூடுதல் ஆணையர் சுரேஷ் ககானி அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.


'விநாயகர் சதுர்த்தி விழா முடிந்து வரும் அடுத்த 15 நாள்கள் மிகவும் முக்கியமானவை ஆகும். விநாயகர் சதுர்த்தி முடிந்து மும்பை திரும்புபவர்கள் இலவசமாக ஆர்.டி. பி.சி. ஆர். கொரோனாப் பரிசோதனை செய்துகொள்ள 266 மையங்களை மும்பை மாநகராட்சி அமைத்துள்ளது. இதை ஊர் திரும்புபவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சோதனை முடிவுகள் அவர்களின் வீடுகளுக்கே அனுப்பி வைக்கப்படும்' என்று அவர் தெரிவித்துள்ளார்.

மும்பை மேயர் கிரோரி பனட்னே கர் கூறுகையில், 'மக்கள் தங்கள் சொந்த ஊரில் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும்போதும் கவனமாக இருக்கவேண்டும்.

மும்பை திரும்புவோருக்காக பரிசோதனை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அவற்றை மக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொற்று மேலும் பரவாமல் தடுக்கும்' என்று தெரிவித்திருக்கிறார்.

# கேரளா மற்றொரு ஆப்கானாக மாறும் அல்போன்ஸ் எம்.பி. எச்சரிக்கை விடுப்பு



கேரளாவில் சில பொது அமைப்புகள் தீவிரவாதத்தை ஊக்கப்படுத்துவதாக பா.ஜ.க. எம்.பியும் முன்னாள் மத்திய அமைச்சருமான கே.ஜே.அல்போன்ஸ் குற்றஞ்சாட்டியுள்ளார், அடுத்த ஐந்து முதல் பத்து ஆண்டுகளில் கேரளா மற்றொரு ஆப்கானிஸ்தானாக மாறும் என்றும் அவர் எச்சரித்திருக்கிறார்.

'கடந்த 25 ஆண்டுகளில் கேரளாவில் அதிகளவில் தலிபான் கொள்கைகள் பரப்பப்பட்டுள்ளன. கேரள பா.ஜ.க. பொதுச் செயலாளர் ஜார்ஜ் குரியன், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கு கேரளாவின் ஜிஹாதி நடவடிக்கைகளைத் தடுக்க மத்திய அரசின் தலையீடு தேவை என்று கடிதம் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்தில், முஸ்லிம் அல்லாத இளைஞர்களை தீவிரவாதத்தில் சிக்க வைப்பதற்காக இஸ்லாமியக் குழுக்களால் நடத்தப்படும் பல்வேறு வகையான ஜிகாத் நடவடிக்கைகள் தொடர்பாக பலா றோமன் கத்தோலிக்க பிப் மார் ஜோசப் கல்லரங்காட் கூறிய குற்றச்சாட்டுகளை உங்கள் கவனத்திற்கு கொண்டுவருகிறேன், என தெரிவித்திருந்தார். மேலும், தீவிரவாத அமைப்புகளுக்கான ஆட்சேர்ப்பு மையமாக கேரளா மாறி வருகிறது என்று சமீபத்தில் முன்னாள் பொலிஸ் தலைவர் லோக்நாத் பெஹ்ரா கூறியிருக்கின்றமையும் குரியன் தனது கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

கேரளாவில் இளம் பெண்கள் பெரும்பாலும் காதல் மற்றும் போதைப்பொருள் ஜிஹாத்துக்குப் பலியாகி வருகின்றனர் என பிப் ஜோசப் கல்லரங்கட் குற்றம் சாட்டியுள்ளார். இந்தத் தந்திரோபாயங்கள் முஸ்லிமல்லாதவர்களை அழிக்கப் பயன்படுத்தப்படுகின்றன என்றும் அவர் கூறியுள்ளார். பிப்பின் அறிக்கைக்கு காங்கிரஸ் மற்றும் சி.பி.ஐ. (எம்) கட்சிகள் கண்டனம் தெரிவித்தன. ஆனால், பா.ஜ.க. இந்த அறிக்கையை ஆதரித்தது.

பிப்பின் அறிக்கை சர்ச்சைக்குள்ளானபோது, அவருக்கு எதிராக எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கும் எண்ணம் மாநில அரசுக்கு இல்லை என்று கேரள முதல்வர் பினராயி விஜயன் கூறியிருந்தார். பிப்பின் நோக்கம் போதைப்பொருளின் தீமைகளுக்கு எதிராக தனது சமூகத்தை எச்சரிப்பதே தவிர, மதங்களுக்கிடையே பகைமையை உருவாக்கவோ அல்லது வகுப்புவாத நல்லிணக்கத்தை சீர்குலைப்பதோ அல்ல என்றும் அவர் கூறியிருந்தார். இந்த நிலைமைகளை அவதானித்து உரிய நடவடிக்கைகளை எடுக்காத பட்சத்தில் அடுத்த 5-10 ஆண்டுகளில் கேரளா மற்றொரு ஆப்கானிஸ்தானாக மாறும்' என்று கே.ஜே. அல்போன்ஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# அ.தி.மு.க. ஒற்றுமையோடு செயல்பட்டால் வெற்றி முன்னாள் அமைச்சர் வேலுமணி நம்பிக்கை

தமிழக ஊரக உள்ளாட்சித் தேர்தலில் அ.தி.மு.கவினர் ஒற்றுமையுடன் செயல்பட்டால் நூறு வீத வெற்றியைப் பெறலாம் என்று முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ராணிப்பேட்டை மாவட்டத்தில் நடைபெறவிருக்கும் உள்ளாட்சித் தேர்தல் தொடர்பான அ.தி.மு.கவின் ஆலோசனைக்கூட்டம் ராணிப்பேட்டையில் நடைபெற்றது. அங்கு உரையாற்றிய வேலுமணி, உள்ளாட்சித் தேர்தலில் கூட்டணிக் கட்சிகளுக்கு விட்டுக்கொடுத்துப் பணியாற்றினால் சட்டப்பேரவைத் தேர்தலில் மேற்கு மண்டலத்தில் 100 சதவீதம் வென்றது போன்று இங்கும் வெற்றியை வசப்படுத்த முடியும் என்று கூறினார்.

தி.மு.கவை தோற்கடிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு நாம் செயல்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க. பொய்யான வாக்குறுதிகளைக் கொடுத்து வெற்றி பெற்றதை எடுத்துக்கூறினாலே அ.தி.மு.கவுக்கு வெற்றி எளிதாகிவிடும் என்றும் எஸ்.பி. வேலுமணி அங்கு குறிப்பிட்டார்.

# திலீபனின் நினைவுதினம் அனுஷ்டிக்க மட்டக்களப்பு மாவட்டத்தில் தடை விதிப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தில் தியாக தீபம் திலீபனின் நினைவுதினம் அனுஷ்டிக்கப்படுவதற்கு எதிராக பல்வேறு தரப்பினருக்கும் நீதிமன்றங்கள் ஊடாக தடையுத்தரவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தியாக தீபம் திலீபனின் நினைவுதினம் வடக்கு கிழக்கில் தொடர்ச்சியாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

கொவிட் அச்சுறுத்தல் காரணமாக வடக்கில்தமிழ்தேசியம்சார்ந்துசெயற்படும் அரசியல்கட்சி உறுப்பினர்கள் அவர்களது அலுவலகங்களில் தியாக தீபம் திலீபனுக்கு நினைவு தினம் அனுஷ்டித்து வருகின்றனர்.

இந்த நிலையில் கிழக்கு மாகாணத்தில் இம்முறையும் தியாக தீபம் திலீபனின் நினைவுதினத்தினை அனுஷ்டிக்காமல் தடுப்பதற்கான கடும் பிரயத்தனங்களை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தியாக தீபம் திலீபனின் நினைவு தினத்தினை அனுஷ்டிப்பதை தடுக்கும் வகையில் பலருக்கு நீதிமன்றம் ஊடாக தடையுத்தரவுகள் வழங்கப்பட்டுவருகின்றன.

அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், முன்னாள் போராளிகள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இளைஞர் அணி தலைவர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் என பல்வேறு தரப்பினருக்கும் இந்த தடையுத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன.

தியாக தீபம் திலீபனின் நினைவுதினம் அனுஷ்டித்தால் அதற்குஎதிரானவர்கள் ஆர்ப்பாட்டம் செய்வார்கள் எனவும் அவ்வாறு செய்தால் மக்கள் அதிகளவில் ஒன்றுகூட சந்தர்ப்பம் உள்ளதாகவும் கொவிட் தொற்று அதிகரித்துள்ள காரணத்தினால் குறித்த நிகழ்வுக்கு தடை விதிக்குமாறு மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்கள் ஊடாக நீதிமன்றங்களில் இந்த தடையுத் தரவுகள் பெறப்பட்டுவழங்கப்பட் டுள்ளன. இந்த தடையுத்தரவானது ஜனநாயகத்தினையும் தனிமனித சுதந்திரத்தினை யும் குழிதோண்டி புதைக்கும் செயற்பாடு என பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.


## கொரோனா தடுப்பூசி அட்டைகள் இல்லாமல் பொலிஸ் நிலையத்துக்குள் செல்லத் தடை

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் நிலையத்துக்குள் செல்லும் போது மக்களிடம் கொரோனாத் தடுப்பூசி போட்டுக் கொண்டதற்கான அட்டைகள் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன.

தடுப்பூசி போட்ட அட்டைகள் வைத்திருப்போர் மாத்திரமே பொலிஸ் நிலையத்துக்குள் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

பொலிஸ் நிலையத்துக்குள் பிரவேசிக்கும் போது கொரோனாத் தடுப்பூசி செலுத்திய அட்டையை கொண்டு உட்பிரவேசிக்க வேண்டும் என காத்தான்குடி பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் அறிவித்தல் போடப்பட்டுள்ளது. தடுப்பூசி செலுத்திய அட்டையை கொண்டு செல்பவர்கள் மாத்திரமே உள்ளே அனுமதிக்கப்படுகின்றனர்.

தடுப்பூசி செலுத்தாமல் செல்பவர்களை தடுப்பூசியை செலுத்தி வருமாறு பொலிஸ் அதிகாரிகளால் பணிக்கப்படுகின்றனர்.




## குச்சவெளி ஜாயா நகரைச் சேர்ந்த மீனவரை 8 நாளாக காணவில்லை

அட்டை பிடிப்பதற்காக கடலுக்குச் சென்ற திருகோணமலை குச்சவெளி, ஜாயா நகரைச்சேர்ந்த மீனவர் ஒருவரை எட்டு நாள்களாகியும் காணவில்லை எனக் கூறப்படுகின்றது.

கடந்த திங்கட்கிழமை குச்சவெளியிலிருந்து புறப்பட்டு, பருத்தித்துறை குடாரப்பு சென்று அங்கியிருந்து 30 மைல் தொலைவில் உள்ள கடல் பகுதியில் அட்டைப் பிடிப்பதற்குச் சென்றவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

காணாமல் போனவருடன் படகு ஓட்டுநரும் போயுள்ளார். அட்டைப் பிடிப்பதற்காக கடலுக்குள் சென்றவர் குறிப்பிட்ட நேரமாகியும் மேலே வராததனால் படகு ஓட்டுநர் அவர் கொண்டு போன கயிற்றை இழுத்துப் பார்த்துள்ளார். சுழி ஓடியவரைக் காணவில்லை.

இன்றுடன் 8 நாள்கள் கடந்தும் இதுவரை அவரைக் காணவில்லை. இது சம்பந்தமாக உறவினர்கள் பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதோடு, கடற்படையினர் மற்றும் மீனவர்கள் தேடியும் இதுவரை அவரைக் காணவில்லை.

30 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

## தந்தையின் கண் ஒன்றை விரலால் தோண்டிய மகன்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தியாவட்டவான் பாடசாலை வீதியில் தந்தையின் கண் ஒன்றை அவரது மகன், தனது கை விரல்களால் தோண்டி சிதைவடையச் செய்துள்ள சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தந்தைக்கும் மகனுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக 67 வயதுடைய தனது தந்தையை கடுமையாக தாக்கிய 19 வயதான மகன், தந்தையின் கண்ணை தோண்டி சிதைத்துள்ளர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த செயற்பாட்டுக்கு போதைவஸ்துப் பாவனையே காரணமாக அமைந்துள்ளது என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இவ்வாறு கண் சிதைவடைந்து வெளியில் வந்த நிலையில் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தந்தை, மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவத்தை அடுத்து அவரது மகனை சந்தேகத்தின் பேரில் வாழைச்சேனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை மூன்று பேர் கைது; கசிப்பு, கோடா மீட்பு

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள களுவங்கேணி காட்டுப்பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்றை இன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பொலிஸார் முற்றுகையிட்டனர். இதன்போது கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 3 பேரை கைது செய்ததுடன், 50 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பும், 3 லட்சத்து 20 ஆயிரம் மில்லி லீற்றர் கோடாவும் மீட்டுள்ளோம் என மாவட்ட விசேட குற்ற விசாரணைப்பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தெரிவித்தார்.

பொலிஸ் மாவட்ட விசேட குற்ற விசாரணைப்பிரிவு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்காவின் ஆலோசனைக்கமைய மாவட்ட விசேட குற்ற விசாரணைப்பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தலைமையிலான பொலிஸார் சம்பவதினமான இன்று அதிகாலை 3 மணியளவில் குறித்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை முற்றுகையிட்டனர். இதில் கைது செய்யப்பட்டவர்களை ஏறாவூர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



# ஐ.பி.எல். கிரிக்கெட் இன்று மீண்டும் ஆரம்பம் சென்னை-மும்பை முதல் போட்டியில் மோதல்




14 ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் கடந்த ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி ஆரம்பமாகி நடந்து வந்த நிலையில் கொரோனாத் தொற்றுக் காரணமாக மே 3 ஆம் திகதியுடன் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது. அதுவரை 29 லீக் ஆட்டங்கள் நடந்து முடிந்திருந்தன. இந்த நிலையில் மீதமுள்ள 31 ஆட்டங்கள் ஐக்கிய அரபு இராச்சியத்தில் உள்ள டுபாய், அபுதாபி, சார்ஜா ஆகிய நகரங்களுக்கு மாற்றப்பட்டு, 4 மாதங்களுக்குப் பின்னர் இன்று மீண்டும் தொடர் ஆரம்பமாகின்றது.

டுபாயில் இன்று நடக்கும் இரண்டாம் பகுதியின் முதல் போட்டியில் 5 முறை சம்பியனான ரோகித் சர்மா தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணி, டோனி தலைமையிலான முன்னாள் சம்பியன் சென்னை சூப்பர் கிங்ஸுடன் மோதுகிறது.

புள்ளிப் பட்டியலில் 5 வெற்றிகள், 2 தோல்விகள் என்று 10 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ள சென்னை அணி, இன்றைய போட்டியில் வெற்றி பெற்றால் மறுபடியும் முதலிடத்துக்கு முன்னேறிவிடலாம். இவ்விரு அணிகளும் ஏற்கனவே டெல்லியில் சந்தித்த லீக் போட்டியில் சென்னை அணி 218 ஓட்டங்களைக் குவித்த போதிலும், பொலார்ட்டின் 34 பந்துகளில் 87 ஓட்டங்கள் எடுத்த அதிரடியால் மும்பை அணி இறுதிப் பந்தில் வெற்றிபெற்றது. மும்பை அணி 4 வெற்றிகள், 3 தோல்விகள் என 8 புள்ளிகளுடன் நான்காவது இடத்தில் உள்ளது.






# மேற்கிந்தியத் தீவுகளின் ஹோல்டிங் கிரிக்கெட் வர்ணனையிலிருந்து ஓய்வு

31 ஆண்டுகளாக தொலைக்காட்சி கிரிக்கெட் வர்ணனை மூலமும் அரிய பல கிரிக்கெட் ஆட்ட நுட்பங்களை ரசிகர்களுக்கும், விளையாடுவோருக்கும் கற்றுக் கொடுத்த மேற்கிந்தியத் தீவுகளின் மைக்கேல் ஹோல்டிங், இந்த கிரிக்கெட் பருவகாலத்தோடு சர்வதேச கிரிக்கெட் வர்ணனையிலிருந்தும் ஓய்வுபெறுகிறேன் என அறிவித்துள்ளார்.

60 டெஸ்ட் போட்டிகள், 102 ஒருநாள் போட்டிகளில் மேற்கிந்தியத் தீவுகளுக்காக விளையாடி, அவர் காலத்தைய துடுப்பாட்ட வீரர்களுக்கு கடும் சவாலாக விளங்கிய அதிவேகப் பந்துவீச்சாளர் மைக்கேல் ஹோல்டிங் 391 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார். 1987 இல் ஓய்வு பெற்ற ஹோல்டிங் 1990 இல் முதன் முதலாக இங்கிலாந்து அணியின் மேற்கிந்தியத் தீவுகள் பயணத்தின்போது சர்வதேச கிரிக்கெட் வர்ணனைப் பணியை ஆரம்பித்தார்.

இப்போது 67 வயதாகும் ஹோல்டிங், கடந்த வருடத்திலேயே இன்னும் எத்தனை நாள்களுக்கு வர்ணனை செய்வேன் என்பது தனக்குத் தெரியவில்லை குறிப்பிட்டிருந்தார். கொரோனாப் பரவல் காரணமாக கிரிக்கெட் போட்டிகளெவையும் நடைபெறாதிருந்த காலப்பகுதி என்பதால், இனி அந்தப் பணியில் ஈடுபடாமலேயே போய்விடுவேனோ என்ற அச்சம் தனக்கிருப்பதாகவும் அவர் பேட்டியொன்றில் தெரிவித்திருந்தார்.

மேற்கிந்திய ஆங்கில உச்சரிப்பில் கிரிக்கெட்டின் நுணுக்கங்களை மிக அழகாக விவரிக்கும் ஹோல்டிங்கின் ஓய்வு, கிரிக்கெட் வர்ணனைப் பிரியர்களுக்கு ஒரு பெரிய இழப்பாக அமையும் என்று அவரது சக வர்ணனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஸ்கை ஸ்போர்ட்ஸ் வர்ணனைக் குழுவில் 20 ஆண்டுகளாகப் பணியாற்றி வரும் மைக்கேல் ஹோல்டிங், பந்துக்குப் பின்னாலேயே ஓடும் இன்றைய வர்ணனையாளர்களைப் போலல்லாது ஆட்ட நுணுக்கங்களை விவரிக்கும் தனது திறனால் தனித்தன்மையைக் கொண்டிருந்தவராகப் போற்றப்படுகிறார். தனது உணர்வுகளை வெளிப்படையாகக் காண்பித்து பாராட்டவும், விமர்சனங்களை வெளியிடவும் தயங்காதவர் ஹோல்டிங். பாகிஸ்தானின் மொஹமட் ஆமீர் கிரிக்கெட் சூதாட்ட விவகாரத்தில் சிக்கியபோது அது தொடர்பான தொலைக்காட்சி உரையாடலில் திறமையான இளைய வீரர்கள் இப்படியாக வழிமாறுவது குறித்து தனது கருத்தைக் கூறும் போது கண்ணீர் சிந்தியிருந்தார்.

அமெரிக்காவில் ஜோர்ஜ் ப்ளொயிட் என்ற கறுப்பின மனிதர் நிறவெறித் தாக்குதலில் கொல்லப்பட்டபோது அதற்காக உரத்துக்குரல் எழுப்பிய ஹோல்டிங், கல்வியின் மூலமே அடக்குமுறைகளுக்கு எதிராக ஆற்றலோடு நிற்கமுடியும் என இளையவர்களை நோக்கி அழைப்பு விடுத்திருந்தார். இந்த கிரிக்கெட் பருவகாலத்தோடு சர்வதேச கிரிக்கெட் வர்ணனையிலிருந்து ஹோல்டிங் ஓய்வுபெறுகிறேன் என தெரிவித்துள்ளார்.

# இலங்கை வீரர்களின் வருகையால் பெங்களூரு அணிக்கு கூடுதல் பலம்

ஐ.பி.எல். தொடரில் நாளை நடக்கவுள்ள லீக் ஆட்டத்தில் பெங்களூரு ரோயல் சலஞ்சர்ஸ் அணி, கொல்கத்தா நைட் ரைடர்ஸை அபுதாபியில் சந்திக்கிறது. இந்த போட்டியின்போது பெங்களூரு அணியினர் வழக்கமான சிவப்பு நிறச் சீருடைக்குப் பதிலாக நீல நிற உடை அணிந்து விளையாடவுள்ளனர். போட்டி முடிந்ததும் இந்தச் சீருடைகள் ஏலம் விடப்பட்டு அதன் மூலம் கிடைக்கும் நிதியை இந்தியாவில் கொரோனாத் தடுப்பூசிப் பணிகளுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.




புதிய சீருடையை அறிமுகப்படுத்திய பெங்களூரு அணியின் தலைவர் விராட் கோலி, எங்கள் அணியில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. மாற்றுவீரர்களாக சிலர் சேர்க்கப்பட்டுள்ளனர். முதலாவது பகுதியில் விளையாடிய கேன் ரிச்சர்ட்சன், அடம் ஸம்பா ஆகியோர் தனிப்பட்ட காரணங்களுக்காக விலகியுள்ளனர்.

அவர்களுக்குப் பதிலாக சேர்க்கப்பட்டுள்ள இலங்கை வீரர்களான ஹசரங்க, துஷ்மந்த சமீர இருவரும் இலங்கையில் அதிகளவில் கிரிக்கெட் விளையாடியவர்கள். அங்குள்ள ஆடுகளங்களும், ஐக்கிய அரபு இராச்சியத்திலுள்ள ஆடுகளங்களும் ஒத்த தன்மையைக் கொண்டவை. அதனால், இங்கு எப்படி பந்து வீச வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியும். அவர்களது திறமை அணிக்கு மிகப்பெரிய உதவியாக இருக்கும். சில வீரர்கள் விலகினாலும் நாங்கள் வலுவாக இருப்பதாகவே உணர்கிறோம்.

புதிய வீரர்களின் வருகை எங்களுக்கு புதிய பரிமாணத்தைக் கொடுத்துள்ளது. முதல் பாதியில் எப்படி விளையாடினோமோ அதே உறுதியுடன் இரண்டாவது கட்டத்திலும் விளையாட வேண்டியது முக்கியம், என்று தெரிவித்துள்ளார்.



# ஐ.பி.எல். போட்டிகளை நேரில் காணச்செல்லும் ரசிகர்களுக்கு மைதானங்களில் கட்டுப்பாடுகள்

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரின் இரண்டாம் கட்டப் போட்டிகள் இன்று ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஆரம்பமாகின்றன. டுபாய், அபுதாபி, சார்ஜா ஆகிய இடங்களில் போட்டிகள் நடைபெறுகின்றன.

இந்த போட்டிகளை ரசிகர்கள் நேரில் கண்டுகளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ரசிகர்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகளும் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி, டுபாய் மைதானத்திற்குச் செல்லும் ரசிகர்கள் கொரோனாப் பரிசோதனை செய்து, தொற்று இல்லை என்பதற்கான சான்றிதழ்களைக் கொண்டு செல்ல வேண்டிய தேவையில்லை. ஆனால், கட்டாயம் இரண்டு தவணைகளுக்கான தடுப்பூசி செலுத்தியிருக்க வேண்டும். சமூக இடைவெளியைப் பின்பற்றுவதுடன், கட்டாயம் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும். 12 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு மட்டும் தடுப்பூசி செலுத்தியிருப்பதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

சார்ஜா மைதானத்தைப் பொறுத்தவரை, 16 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். தடுப்பூசி செலுத்தப்பட்ட சான்றிதழுடன் 48 மணி நேரத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட கொரோனாப் பரிசோதனைச் சான்றிதழையும் கொண்டு வர வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அபுதாபி மைதானத்திற்கு வரும் ரசிகர்களில் 16 வயதுக்கு மேற்பட்டவர்கள் தடுப்பூசி செலுத்தப்பட்ட சான்றிதழ், கொரோனாப் பரிசோதனை சான்றிதழ் ஆகியவற்றை வைத்திருக்க வேண்டும். 12 முதல் 15 வயதிற்குட்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்ட சான்றிதழ் தேவையில்லையெனினும் கொரோனாப் பரிசோதனை செய்து தொற்று இல்லை என்ற சான்றிதழ் கொண்டு வரவேண்டும் என்றும், 12 வயதிற்கு உட்பட்டவர்கள் 21 வயதுக்கு மேற்பட்ட ஒருவரின் துணையுடன் வரவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசியல் வியாபாரத்தை புறம்தள்ளி ஒற்றுமையாகக் குரல் கொடுங்கள்!

## வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம்

நீதிக்காக ஏங்கும் தமிழ்மக்கள் விடயத்தில் அரசியல் வியாபாரத்தை புறந்தள்ளி நீதியை பெற்றுத்தாருங்கள் என வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் செயலாளர் சி.ஜெனிற்றா தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

ஓம்.எம்.பி. அலுவலகம் ஒரு கண்துடைப்பிற்காகவே உருவாக்கப்பட்டது. அது சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காக அரசின் தந்திரோபாயத்தால் உருவாக்கப்பட்டது. அந்த அலுவலகத்தின் மீது எமக்கு நம்பிக்கையில்லை. அதனை யாருக்காகத் திறந்தார்கள் என்பது எமக்குத் தெரியாது. கொலையாளிகளிடம் தமிழர்களுக்குநீதிவழங்குவதற்கான பொறுப்பை வழங்க முடியுமா என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

எனவே இனப்படுகொலையை செய்த இலங்கை அரசுக்கு மன்னிப்பு வழங்காமல் குற்றவாளிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்தி எம் உறவுகளுக்கு சர்வதேச நீதி கிடைப்பதற்கு இணை அனுசரணை நாடுகள் உதவி புரிய வேண்டும்.

இந்த நெருக்கடியான காலப்பகுதியிலும் எமது சங்கத்தின் அம்பாறை மாவட்ட தலைவியை பொலிஸார் விசாரணைக்கு அழைத்துள்ளார்கள். மனித உரிமை அமர்வுகள் இடம்பெற்றுகொண்டிருக்கும் சூழலில் கூட இந்த அரசு மீறல்களை அரங்கேற்றி வருகின்றது.

அமைச்சர் தினேஸ் குணவர்தன உட்பட பலர் எமது நீதிக்கான போராட்டத்தை மழுங்கடிப்பதற்காகப் பல்வேறு பொய்களை கூறி சர்வதேசத்தை திசைதிருப்பி வருகின்றனர். நாம் 12 வருடமாகத் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறோம்.

எனவே சர்வதேச நாடுகள் தங்களது நலனுக்காக இலங்கை அரசைப் பாதுகாக்காமல் மனிதாபிமான அடிப்படையில் எமது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்வரவேண்டும்.

இந்த அமர்விலாவது எமது உறவுகளுக்கு நீதி கிடைப்பதற்கு வழிசமைக்க வேண்டும்.

இன்று தமிழ் அரசியல் வாதிகள் தங்களது கதிரைகளைப் பாதுகாப்பதற்காகத் தங்களுக்குள் பேரம்பேசிக்கொண்டிருக்கின்றார்கள். அதனைத்தவிர்த்து மக்களின் விடுதலைக்காக அரசியல்வாதிகளும், பொதுமக்களும் ஒட்டுமொத்த குரலாக ஒலித்து ஒன்றாகச் செயற்பட வேண்டும்.

நாங்கள் அனுப்பிய கடிதங்களைப் பார்த்தால் தமிழ்மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக உங்களது அரசியலுக்காக அனுப்பியிருக்கின்றீர்களா என்றே எண்ணத் தோன்றுகின்றது.

இலங்கை அரசு புள்ளிவிவர அடிப்படையில் கடிதங்களை அனுப்பியிருக்கின்றது. அது உங்களால் ஏன் முடியாது.

நாடாளுமன்றம் சென்று வெற்று கதை பேசிவிட்டு வருகின்றீர்கள். எமக்காகக் குரல்கொடுப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் நாம் பயணித்தோம்.

எனவே தேசியம் பேசிக் கொண்டு பிரிந்து நின்று இனத்துரோகமாக செயற்படாதீர்கள். எமது நீதிக்காக, உங்களது அரசியல் வியாபாரத்தை மறுபக்கம் வைத்துவிட்டு நீதியை பெற்றுத்தாருங்கள். - என்றார்.

# ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகை; ஏப்ரலில் இறுதித் தீர்மானம்

இலங்கைக்கு வழங்கப்படுகின்ற ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையைதொடரக்கூடாதென்பதை வலியுறுத்தி ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், ஐரோப்பிய ஒன்றியத்தின் சிறப்புக் குழு கொழும்பு வருகின்றது.

உள்ளக தகவல்களின் படி அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்தில் இலங்கை தொடர்பாகத் தீர்க்கமான முடிவு ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் எடுக்கப்படவுள்ளது. இதேவேளை ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை தொடர்ந்தும் வழங்குவதா இல்லையா? என்பது தொடர்பாக ஆராய்வதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் சிறப்புக் குழு எதிர்வரும் 27 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளது.

ஒக்ரோபர் 4 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கும் ஐரோப்பிய ஒன்றிய குழு ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்ட அரசாங்கத்தின் பலரையும் சந்திக்கவுள்ளது.

அதேபோன்று எதிர்க்கட்சி தலைவர் மற்றும் சிவில் சமூகத்தினரையும் சந்தித்து கலந்துரையாட தீர்மானித்துள்ளனர். இலங்கையில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் மனித உரிமைகள், ஜனநாயகம் மற்றும் நல்லாட்சி உள்ளிட்ட பல்வேறு விடயங்களை விரிவாக ஆராயவுள்ளனர்.

இந்தக்குழுவினரால் தயாரிக்கப்படும் அறிக்கை அடுத்த ஆண்டு முதலாம் காலாண்டில் ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இதனடிப்படையிலேயே இலங்கைக்கு தற்போது கிடைக்கப்பெறுகின்ற ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையைத் தொடர்வதா? இல்லையா? என்பது தொடர்பாகத் தீர்மானிக்கப்படும்.

இவ்வாறானதொரு நிலையில் இலங்கைக்கு வழங்கப்படுகின்ற ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை ரத்து செய்வது தொடர்பாக மீளாய்வு செய்வதற்கான தீர்மானம் ஒன்று ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் கடந்த ஜூன் மாதம் நிறைவேற்றப்பட்டது.

705 பேர் கொண்ட ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் 628 பேர் இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு ஆதரவாக இதன் போது வாக்களித்திருந்தனர். இதனடிப்படையில் மனித உரிமைகள் தொடர்பில் இலங்கையின் உறுதிப்பாடுகள் செயற்படுத்தப்படாமை, மனித உரிமைகளுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் மற்றும் அரசியல், சிவில் செயற்பாட்டாளர்களுக்கு எதிராக பயங்கரவாதத் தடைச்சட்டம் பிரயோகிக்கப்படல் போன்ற பிரதான விடயங்களின் அடிப்படையிலேயே ஐரோப்பிய ஒன்றியத்தில் குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் சிறப்புக்குழுவின் அறிக்கை இலங்கைக்கு பாதகமாகும் பட்சத்தில் நெருக்கடியை ஏற்படுத்தும்.

மறுபுறம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் வாய்மூல அறிக்கையில் இலங்கை தொடர்பாக சுட்டிக் காட்டப்பட்ட விடயங்கள், நீண்ட கால கண்காணிப்புகள் மற்றும் கொழும்பிற்கு விஜயம் செய்யும் குழுவின் அறிக்கை என்பவற்றைக் கருத்தில் கொண்டு ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை குறித்து தீர்மானிக்கப்படவுள்ளது.

எவ்வாறாயினும் இலங்கை குறித்து ஐரோப்பிய ஒன்றியம் எடுக்கப்படவுள்ள தீர்மானங்கள் சாதகமாக அமையாது என எதிர்க்கட்சியினர் குறிப்பிட்டுள்ளனர். தற்போதைய நிலைப்பாட்டின் படி அடுத்த வருடம் மே மாதம் வரையில் ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை இலங்கைக்கு வழங்கவும் அதற்கு பின்னர் அந்த சலுகையை இடைநிறுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. ஆனால் உத்தியோகபூர்வ நிலைப்பாடு ஐரோப்பிய குழுவின் வருகையின் பின்னர் வெளிப்படும் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி.பிளஸ் வரி சலுகையால் கூடிய பயன் பெறும் நாடுகளில் இலங்கை முன்னிலையில் உள்ளது. 2020 ஆம் ஆண்டில் 22.4 வீத ஏற்றுமதி ஐரோப்பிய ஒன்றியத்துக்கானதாகும்.

இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு இடையிலான ஏற்றுமதி பொருளாதார இடைவெளி இலங்கைக்கு சாதகமாகவே உள்ளது. இதே போன்று இலங்கைக்கு குறுகிய காலம் தடைப்பட்டு போன ஜி.எஸ்.பி.சலுகை இன்மையினால் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கையின் ஏற்றுமதிகளில் மிக பெரிய சந்தை வாய்ப்பைக் கொண்டிருந்த ஆடை ஏற்றுமதி பங்களதேஷ் வசமானது.

இலங்கைக்கான சந்தை வாய்ப்புகள் ஏனைய நாடுகளில் ஆக்கிரமிக்கப்படுவது தேசிய பொருளாதாரத்தைக் கடுமையாக பாதித்து விடும். மறுபுறம் ஏற்றுமதி -இறக்குமதி சந்தை இடைவெளியை இலங்கை பாதுகாக்கத் தவறும் பட்சத்தில் அது மேலும் நெருக்கடிகளைத் தோற்றுவிக்கும்.

எனவே இலங்கையைப் பொறுத்தவரையில் ஐரோப்பிய ஏற்றுமதி சந்தை மிகவும் சாதகமான தன்மையையே பெற்றுக்கொடுத்துள்ளது. ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை மீண்டும் இழப்பது என்பது அது இலங்கையின் பொருளாதாரத்தை மிக மோசமாகப் பாதிக்கும் எனக் குறிப்பிடப்படுகின்றது.





# தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தால் சிறுப்பிட்டியில் குருதிக்கொடை முகாம்



தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் கோப்பாய்த் தொகுதிக் கிளையின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் நேற்று சனிக்கிழமை சிறுப் பிட்டியில் இடம்பெற்றது.

சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்ற இந்த இரத்ததான முகாமில் வட பிராந்திய இரத்த வங்கியின் பொறுப்பதிகாரி வைத்தியர் ம. பிரதீபன், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் த. ரவீந்திரதாஸ் ஆகியோர் அடங்கிய குழுவினர் கலந்து கொண்டு இரத்த சேகரிப்பில் ஈடுபட்டனர்.

கொரோனாப் பெரும் தொற்றுக்காரணமாக வைத்தியசாலைகளுக்குச் சென்று குருதி வழங்குபவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால் அவசர சிகிச்சைகளுக்குத் தேவையான குருதிக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் இரத்த தானம் செய்ய முன்வருமாறு இரத்த வங்கி விடுத்த அவசர வேண்டுகோளை ஏற்றுத் தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் இரத்ததான முகாம்களை ஏற்பாடு செய்து வருகின்றது.

இதன் தொடர்ச்சியாக கோப்பாய்த் தொகுதிக் கிளையால் சிறுப்பிட்டியில் குருதிக் கொடை முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இமந்த முகாமில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் சூழல் பாதுகாப்பு அணியின் துணைப் பொதுச்செயலாளர் தா. யுகேஸ் கலந்துகொண்டு பங்கேற்ற அனைவருக்கும் செவ்விரத்தம் பூச்செடிகளை வழங்கி வைத்தார்.

# மதுபானசாலைகளை திறப்பதற்கு எடுத்த தீர்மானம் மிகவும் கவலைக்குரியது

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

மதுபானசாலைகளை திறப்பதற்கு எடுத்துள்ள தீர்மானம் மிகவும் கவலைக்குரியதாகும். இது கடும் நெருக்கடிகளுக்கு மத்தியில் கொவிட் பரவலைக் கட்டுப்படுத்த முன்னெடுக்கப்பட்ட சகல நடவடிக்கைகளையும் சீர்குலைக்கும் வகையிலான செயற்பாடாகும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் விசனம் வெளியிட்டுள்ளது.

இந்த விடயத்தில் பாதுகாப்பு பிரிவு முறையாகச் செயற்பட வேண்டும்.

சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். சட்டம் வெவ்வேறு நபர்களின் கைகளில் ஒப்படைக்கப்படக் கூடாது என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வைத்தியர் பிரசாத் கொலம்பகே இதனைத் தெரிவித்தார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.09.2021இல் வெளியிடப்பெற்றது.